EELAM PEOPLES' INFORMATION CENTRE
ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்

B.M. BOX - 1738, LONDON, WC1N-3XX, U.K.
POST BAG 5551, MADRAS - 600 094, INDIA.

EPIC

# போர்நிறுத்தமும் - பேச்சு வார்த்தையும்

என் பாசமிகு தேச மக்களே! அன்புமிக்க தோழர்களே!

எமது தாயகத்தைக் கொடியவர்களின் பிடியில் இருந்து மீட்டெடுக்கும் போராட்ட பாதையின் ஒரு பிரதான கட்டத்தின் செயல்முறையில் இன்று நாம் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றோம்.

எமது விடுதலைப் போராட்டமானது தவிர்க்க முடியாதபடி நீண்ட காலத் தற்காப்புப் போராட்டமாகவே அமைவதை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

பல வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக்கொண்டு ஈழ மக்கள் எம்மோடு போராட்டத்தில் பங்குபற்றி வந்துள்ளனர்.

இப்போராட்டப் பாதையில் தொடர்ந்தும் நாம் முன்னேறிச் செல்வதற்கு ஈழ தேச மக்களுக்குச் சற்று ஓய்வும், சிறிது நிம்மதியான நிலைமையும் தேவைப்படுகின்றது. அதே வேளை எமது போராட்டத்திற்கான சில அடிப்படையான சேகரிப்புகளையும், தயாரிப்புகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியும் உள்ளது.

இந்நோக்கங்களையும் கருதியே தற்காலிகப் போர்நிறுத்தம் - பேச்சு வார்த்தை என்னும் செயல்முறைக்கான தீர்மானங்களை நாம் செயற்படுத்தி வருகின்றோம்.

இவ்விடைநேர ஓய்வின் பின்னர் மீண்டும் எமது போராட்டப் பயணத்தைத் தொடர்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்பது நாம் முன்கூட்டியே எதிர்நோக்கும் முடிவாகும்.

எனவே இக்கால இடைவெளியை ஈழ மக்கள் எவ்வளவு தூரம் எதிர்காலத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அதனைத் தவறாது முழுமையாகத் திட்டமிட்டுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதே போல் எமது தோழர்கள் அனைவரும் அமைப்பைப் பலப் படுத்துவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும், மக்களைத் தயார்படுத்துவதற்கும் இச்சந்தர்ப்பத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

என் உள்ளம் நிறைந்த எத்தனையோ தோழர்களை நான் கடந்து வந்த பாதைகளில் இழந்து விட்டேன். ஆனாலும் அவர்கள் மக்களுக்காக மடிந்த மாவீரர்கள்.

5,000-க்கும் மேற்பட்ட ஈழ மக்கள் சிங்கள இனவெறி பிடித்த கொடிய மிருகங்களால் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள்.

எனினும், இவ்வாறான இழப்புக்களை இதுவரை எதற்காக நாம் கொடுத்தோமோ அந்த நோக்கத்தினை அடைகின்ற வரை மனம் தளராது, உறுதி குலையாது வெற்றிவரை போராடுவோம்.

வாழ்க ஈழத் தேசிய விடுதலை முன்னணி!
இறுதி வெற்றி ஈழ மக்களுக்கே!
வெல்க ஈழ விடுதலைப் போராட்டம்!
வாழ்க ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி!

உங்கள் தோழன்
க. பத்மநாபா
செயலாளர் நாயகம், ஈழ மக்கள் புட்சிரகர விடுதலை முன்னணி

---

மறு வெளியீடு: தமிழக ஈழ நட்புறவுக் கழகம், சென்னை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்